## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# 7வது முறையாக கழக அரசு அமைந்திட கழகத்தினர் உறுதியுடன் பணியாற்றுவோம்!

## நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்!

நீலகிரி, பிப்.4-

நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜூ அனைவரையும் வரவேற்றார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், நகர கழக செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், ராஜ்குமார், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத்துல்லா, வீரபத்திரன், ராஜேந்திரன், உதயதேவன், அமிர்தலிங்கம், மோகன்குமார், செல்வம், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், முத்து, சஞ்சீவ்குமார், ரமேஷ்குமார், சின்னவர், மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கோமதி, ராஜா, காந்தல் ரவி, சீனிவாசன், ஆலன், ரஹமத்துல்லா, அன்வர்அப்துல்லா, ராமசந்திரன், ஜெயந்தி, பவீஷ், ஜெயகுமார், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சுசிலா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, ஹேமமாலினி, பேபி, சித்ராதேவி, சத்தியவாணி, பங்கஜம், போக்குவரத்து தொ.மு.ச. மண்டல பொதுச்செயலாளர் ஆனந்தன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில் நன்றி கூறினார்.

**2026 சட்டமன்ற தேர்தல்:**

2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தலைமை கழகம் அறிவிக்கின்ற ஒவ்வொரு பணிகளையும் ஒவ்வொரு நகர ஒன்றிய பேரூர் கிளை கழக பகுதிகளிலும் நூறு சதவீதம் முடித்து,

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, கூடலூர், குன்னூர் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் வரலாற்று சிறப்புமிக்க வெற்றிப் பெற்று, கழக தலைவர் அவர்கள் தலைமையில் 7வது முறையாக தமிழகத்தில் கழக அரசு அமைந்திட ஒவ்வொரு கழக தோழர்களும் உறுதியேற்று தொடர்ந்து பணியாற்றுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**கழக செயல்வீரர்கள் கூட்டங்கள்:**

எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு நகர - ஒன்றிய - பேரூர் கழக அமைப்புகளில் கழக செயல்வீரர்கள் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துவது எனவும்,

கூட்டங்களில் அந்தந்த கழக அமைப்புகளுக்கு உட்பட்ட ஒவ்வொரு கழக நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள் BLA2, வாக்குச்சாவடி குழுவினர் BLC, மற்றும் அனைத்து கழக செயல்வீரர்களை திரளாக கலந்துக் கொள்ள செய்து என தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அவர்கள் பேசினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




